உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!


# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL

RNI No : TNTAM/2023/85936

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 17.08.2026 • மலர் 04 • இதழ்: 229 • திங்கள்

• Edition : Nagercoil • 17.08.2026 • Vol : 04 • Issue : 229 • Page : 4 • Rs. 5/-


# சுதந்திர தின அணிவகுப்பில் மயக்கமடைந்து உயிரிழந்த காவலர் ரூ.30 லட்சம் நிவாரணம்

## முதல்வர் விஜய் அறிவிப்பு




சென்னை: சுதந்திர தின அணிவகுப்புப் பணியின்போது மயக்கமடைந்து, மருத்துவமனையில் உயிரிழந்த காவலரின் குடும்பத்தினருக்கு ரூ.30 லட்சம் நிதியுதவி வழங்கப்படும் என முதல்வர் ஜோசப் விஜய் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட அறிக்கையில்,

"சென்னை, ஆவடியில் உள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் படைப் பயிற்சி மையத்தின் இசைக்குழுவைச் சேர்ந்த முதல்நிலைக் காவலர் ஏ.தர்மராஜ் (வயது 56) (15.08.2026) புனித ஜார்ஜ் கோட்டையில் நடைபெற்ற சுதந்திர தின அணிவகுப்புப் பணியின்போது திடீரென மயங்கி விழுந்து சிகிச்சைக்காக ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியை அறிந்து மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

முதல்நிலைக் காவலர் ஏ.தர்மராஜின் உயிரிழப்பு தமிழ்நாடு காவல் துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

ஏ.தர்மராஜை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்கள் மற்றும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு ரூ.30 லட்சம் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காவிரியில் தண்ணீர் தர மறுப்பதை கண்டித்து கர்நாடக அரசின் பாலை தரையில் கொட்டி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்




தஞ்சாவூர் ஆகஸ்ட் 17 காவிரியில் தண்ணீர் தர மறுப்பதை கண்டித்து கர்நாடக அரசின் பாலை தரையில் கொட்டி தஞ்சாவூரில் விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

தஞ்சாவூர் சீனிவாசபுரம் கிரி ரோடு பகுதியில் உள்ள பால் விற்பனை நிலையம் முன்பு விவசாயிகள் திடீரென ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் .அப்போது கர்நாடக அரசின் பாலான நந்தினி பால் பாக்கெட்டுகளை விவசாயிகள் கையில் வைத்துக் கொண்டு கர்நாடக அரசை கண்டித்தும், தமிழக அரசை கண்டித்தும் கோஷங்கள் எழுப்பினர்

ஆர்ப்பாட்டத்தில் தமிழகத்திற்கு தண்ணீரை காவிரியில் தர கர்நாடக அரசு மறுத்து வருகிறது. ஆனால் கர்நாடக அரசின் பாலான நந்தினி பால் தமிழகத்தில் விற்பனை செய்யப்படுகிறது. தண்ணீர் தர மறுத்துவிட்டு பாலை மட்டும் விற்பனை செய்ய தமிழகத்தை வியாபாரிதளமாக கர்நாடக அரசு பயன்படுத்திக் கொள்கிறது. கர்நாடக அரசு உடனடியாக சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பின்படி மாதந் தோறும் தண்ணீர் பங்கிட்டு அளவின் படி தண்ணீரை காவிரியில் திறந்து விடப்பட வேண்டும்.

ஆவின் பால் தட்டுப்பாட்டை போக்க வேண்டும். கர்நாடக அரசு தண்ணீர்தர மறுத்தால் அங்கிருந்து வரும் பாலுக்கு தடை விதிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப் பட்டன

இதில் விவசாயிகள் சங்க நிர்வாகிகள் ஜீவக்குமார், என்வி கண்ணன், கோவிந்தராஜ், அறிவழகன் உட்பட பலர் கலந்துகொண்டு, கர்நாடக அரசின் பாலை தரையில் கொட்டி கோஷங்கள் எழுப்பினர்.

## செங்கல்பட்டு, விழுப்புரம் மாவட்டங்களில் ஆக.18ல் கனமழைக்கு வாய்ப்பு

### வானிலை ஆய்வு மையம்



சென்னை: தமிழகத்தில் செங்கல்பட்டு, விழுப்புரம் மாவட்டங்களில் ஆக.18ம் தேதி கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழக கடலோரப் பகுதிகளில் கீழ்மட்ட வளிமண்டலத்தில் ஒரு பலவீனமான காற்றழுத்தத் தாழ்வுப் பாதை நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் (ஆக.17) மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், மதுரை, ராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் ஒருசில இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஒரு சிலஇடங்களில்லேசான மழையும் பெய்யக்கூடும்.

ஆகஸ்டு 18ம் தேதி செங்கல்பட்டு மற்றும் விழுப்புரம் மாவட்டங்களிலும், 19ம் தேதி நீலகிரி, சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

மேற்கூறிய இரு நாட்களில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், வட கடலோர தமிழகத்தில் ஒருசில இடங்களில் மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஒரு சிலஇடங்களில்லேசான மழையும் பெய்யக் கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின் படி அதிகபட்சமாக சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் 4 செமீ, இளையான்குடி, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம், கறம்பக்குடி, நீலகிரி மாவட்டம் வூட் பிரையர் எஸ்டேட், செருமுள்ளி, பந்தலூர் ஆகிய இடங்களில் தலா 2 செமீ மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !

## குழந்தைகள் பாதுகாப்பை தாய்மார்கள் உறுதி செய்ய வேண்டும்

### சிறப்பு கிராம சபை கூட்டத்தில் கலெக்டர் ரேவதி பேச்சு



தஞ்சாவூர் ஆகஸ்ட் 17 குழந்தைகள் பாதுகாப்பை தாய்மார்கள் உறுதி செய்ய வேண்டும் என சிறப்புகிராம சபைகூட்டத்தில் கலெக்டர் ரேவதி பேசினார்

தஞ்சாவூரை அடுத்துள்ள சூரக்கோட்டையில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி வளாகத்தில் சுதந்திர தினத்தை யொட்டி சிறப்பு கிராம சபை கூட்டம் நடந்தது.கூட்டத்தில் கலெக்டர் ரேவதி கலந்து கொண்டு பேசினார் அப்போது அவர் கூறியதாவது:

குழந்தைகள் பாதுகாப்பை அனைத்து தாய்மார்களும் உறுதி செய்ய வேண்டும். குழந்தை திருமணம் இல்லாத கிராமம், குழந்தை தொழிலாளர்கள் இல்லாத கிராமம், பாதுகாப்பான கிராமம் என்பதை உறுதி செய்ய வேண்டும். உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் திருமண உதவித் தொகை ,இயற்கை மரண உதவித் தொகை, விபத்து உதவித் தொகை போன்றவை வழங்கப்படுகிறது

அமைப்பு சாரா தொழிலாளர்கள் தொழிலாளர் நல உறுப்பினர் அட்டையை பெற்று பயன் பெற லாம் .பொதுமக்கள் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் மருத்துவ சேவையை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் இவ்வாறு அவர் கூறினார்

பின்னர் கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவீனம் குறித்தும் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளின் முன்னேற்றம், நிதி செலவினங்கள் குறித்தும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், ஊட்டச்சத்து இயக்கம், பிளாஸ்டிக் பொருள்கள் உற்பத்திக்கு தடை செய்தல், விவசாயிகள்கடன்அட்டை போன்ற பல்வேறு திட்டங்கள் குறித்தும் கூட்டத்தில் விவாதிக் கப்பட்டது. பொதுமக்களின் பல்வேறு கோரிக்கைகளை கலெக்டர் ரேவதி கேட்டறிந்தார்

பின்னர் தஞ்சாவூர் அடுத்துள்ள புன்னைநல்லூர் மாரியம்மன் கோவிலில் பொதுவிருந்துநிகழ்ச்சியை கலெக்டர் ரேவதி மற்றும் விஜய் சரவணன் எம் எல் ஏ ஆகியோர் தொடங்கி வைத்து பொதுமக்களுடன் அமர்ந்து சாப்பிட்டனர். இதில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் தேவ நாதன், மகளிர் திட்ட இயக்குனர் சித்ரா, இந்து சமய அறநிலையத் துறை துணை ஆணையர் கவிதா, உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) கோகுல கிருஷ்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர் சக்திவேல் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## களியக்காவிளை அருகே கேரள நகைக்கடை ஊழியர் விபத்தில் உயிரிழப்பு

களியக்காவிளை, ஆக.17

தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியை சேர்ந்தவர் கண்ணன் (46). இரும்பு வியாபாரியான இவர் தொழில் நிமித்தமாக கேரளா செல்வதற்காக நேற்று முன்தினம் இரவு களியக்காவிளை வழியாக சென்றுள்ளார். இரவு சுமார் 10 மணி அளவில் படந்தாலுமூடு ஆலமூடு பகுதியில் உள்ள ஒரு ஓட்டலில் டிபன் சாப்பிட்டு விட்டுசாலையைக்கடக்க முயன்றுள்ளார். அப்போது அந்த வழியாக கேரள மாநிலம் ஆலப்புழாவை சேர்ந்த ஹரிகிருஷ்ணன் (23) என்பவர் தனது மோட் டார் சைக்கிளில் அதி வேகமாக வந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் சாலையில் நடந்து சென்ற கண்ணன் மீது பயங்கரமாக மோதியது. இந்த விபத்தில் ஹரிகிருஷ்ணன் மற்றும் கண்ணன் இருவரும் தூக்கி வீசப்பட்டு ரத்த வெள்ளத்தில் கிடந்தனர். அங்கிருந்தவர்கள் அவர்களை மீட்டு குழித்துறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு ஹரிகிருஷ்ணனை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாகத் தெரிவித்தனர். படுகாயமடைந்த கண்ணன் மேல்சிகிச் சைக்காக நாகர்கோவில்ஆசாரி பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்று வருகிறார். இதுகுறித்து களியக்காவிளை காவல் நிலைய போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். உயிரிழந்த ஹரிகிருஷ் ணன் கேரளாவில் நகைக்கடையில் பணி புரிந்து வந்தது குறிப்பிடத்தக்கது. அதிவேகமாக மோட்டார் சைக்கிளைஓட்டி வந்ததே இந்த விபத்திற்கு முக்கியக் காரணம் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

## மேற்கு வங்க முன்னாள் துணை சபாநாயகர் ஆஷிஷ் பானர்ஜி தற்கொலை

கொல்கத்தா: மேற்குவங்க மாநில சட்டப்பேரவையின் முன்னாள் துணை சபாநாயகர் ஆஷிஷ் பானர்ஜி, திரிணமூல் காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் தற்கொலை செய்து கொண்டார். தனது முடிவுக்கான காரணம் குறித்து அவர் கடிதம் எழுதி உள்ளார்.

அந்தமாநிலத்தின்பிர்பூம்மாவட்டத்தில் உள்ள திரிணமூல் காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் தூக்கிட்ட நிலையில் அவரதுசடலம்இன்று(ஞாயிற்றுக்கிழமை) கண்டெடுக்கப்பட்டது. நேற்று உள்ளூரில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் பங்கேற்ற அவர், தேசியக் கொடியை ஏற்றி இருந்தார்.

74 வயதான அவர், ராம்பூர்ஹாத் தொகுதியைச் சேர்ந்தவர். கடந்த 2001 முதல் 2026 வரையில் சுமார் 25 ஆண்டு காலம் அந்த தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பினராக பணியாற்றிய அனுபவம் கொண்டவர். திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் மூத்த நிர்வாகிகளில் ஒருவர். கடந்த மேற்குவங்க சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிட்ட அவர், தோல்வி அடைந்தார். தற்போது அந்த தொகுதியில் பாஜகவை சேர்ந்த த்ருபா சாஹா சட்டப்பேரவை உறுப்பினராக உள்ளார்.

இந்நிலையில், ஆஷிஷ் பானர்ஜி தற்கொலை செய்து கொண்டார். அங்கிருந்து ஒரு தற்கொலைக் குறிப்பு அடங்கிய கடிதத்தை போலீஸார் கைப்பற்றி உள்ளனர். அவரது மரணத்துக்கான காரணம் குறித்து போலீஸார் விசாரணையை தொடங்கி உள்ளனர். 1 அந்தக் கடிதத்தில் தன் மீதான ஊழல் குற்றச்சாட்டை அவர் மறுத்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. அதில், "நான் ஊழல்வாதி அல்ல. எனது பொது வாழ்வு முழுவதும் நான் ஊழல் செய்தது கிடையாது" என்று ஆஷிஷ் பானர்ஜி குறிப்பிட்டுள்ளதாக தகவல். தாராபித் ராம்பூர்ஹாத் மேம்பாட்டு ஆணைய முறைகேடு தொடர்பாக அவர் மீது குற்றச்சாட்டு எழுந்தது குறிப்பிடத்தக்கது.

# செல்போன் வழிப்பறி, இருவர் கைது



சிவகங்கை ஆக 16,

காரைக்குடி உட்கோட்ட காவல் துறை நிர்வாகத்திற்கு உட்பட்ட அழகப்பாபுரம் காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட பகுதியில் கடந்த சில நாட்களுக்கு முன் செல்போன் வழிபறி நடைபெற்றது, இதனை விரைவான நடவடிக்கை எடுக்க மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா உத்தரவு பிறப்பித்து இருந்தார், இந்த நிலையில் செல்போன் வழி பறியில் ஈடுபட்டதாக காரைக்குடிக்கு அருகே உள்ள கோவிலூர் பகுதியைச் சேர்ந்த விக்னேஸ்வரன் வயது 18, மானகிரியைச் சேர்ந்த ஆதித்யன் வயது 20 ஆகிய இருவரையும் அழகப்பாபுரம் காவல்துறையினர் கைது செய்தனர். அவர்களிடமிருந்து வழிப்பறி செய்தசெல்போன்கள்பறிமுதல்செய்யப்பட்டது, பின்னர் இருவரையும் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர், செல்போன் வழிப்பறியில் ஈடுபட்ட நபர்களை கைது செய்து விரைவாக நடவடிக்கை எடுத்த அழகப்பபுரம் காவல் துறையினரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வெகுவாக பாராட்டினார் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து வெளியிடப்பட்ட செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போதைஇல்லாதமிழ்நாடு திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினருடன் சந்திப்பு!



திருப்பூர்,ஆக17

திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பாலமுருகன் அவர்களை, திருப்பூர்ஜமாஅத்தேஇஸ்லாமி ஹிந்த் கிளை தலைவர் முகமது காசிம் அவர்களின் தலைமையில், மகளிர் அணி பொறுப்பாளர் அம்சா பேகம் மற்றும் உறுப்பினர்கள், ஊழியர்கள் ஆகியோர் சந்தித்தனர். இச்சந்திப்பின்போது "போதை இல்லா தமிழ் நாடு" பிரச்சார இயக்கம் குறித்து சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. மேலும், இப்பரப்புரையின் வாயிலாக மேற்கொள்ளப்படவுள்ள பல்வேறு பணிகள், மக்கள் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மற்றும் எதிர்கால முன்னெடுப்புகள் குறித்து ஆலோசனையும், ஒத்துழைப்பு தொடர்பான கலந்துரையாடலும் நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினர் இம்முயற்சியை ஆர்வத்துடன் வரவேற்றதோடு, தமது முழுமையான ஒத்துழைப்பையும் வழங்குவதாக தெரிவித்தார். மேலும், படிப்படியாக போதை இல்லாத தமிழ் நாட்டை உருவாக்குவதற்கான அனைத்து பணிகளையும் தாமும் தமது அரசும் மேற்கொள்ளும் என்ற கருத்தையும் தெரிவித்தார்.அவர்களுடன் பல்சமய நட்புறவு கழகத்தின்தலைவர்ஷாஜஹான் திருப்பூர் மாவட்ட பொறுப்பாளர் ஹக்கீம் மற்றும் த.வெ .க.மாநகர் மாவட்ட நிர்வாகிகள் பாண்டியன்,பாபு, கார்த்திக்,விஜயகுமார், ஆகியோர் உடன் இருந்தனர்.... போதை இல்லாத சமூகத்தை உருவாக்கும் நமது முயற்சிகள் மேலும் வலுப்பெறட்டும். எனதிருப்பூர் கிளை

# தென்காசி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்



தென்காசி, ஆகஸ்ட்.17

தென்காசி மாவட்டம் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் 80 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் கலை கதிரவன் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார் இந்நிகழ்ச்சியில் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் தி.மு.ராஜேந்திரன் கலந்து கொண்டு சிறப்பித்தார். நடைபெற்ற 80 ஆவது சுதந்திர தின விழாவில் தலைமை செயற்குழு உறுப்பினரும் முன்னாள் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளருமான செல்லத்துரை, மாவட்ட பொருளாளர் செரிப், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜேசுராஜன், மாவட்ட துணை செயலாளர் கென்னடி, தென்காசி ஒன்றிய குழு தலைவர் சேக்அப்துல்லா,முன்னாள் ஒன்றிய செயலாளர்கள் துரை (எ) ராமையா பாண்டியன், காசி தர்மம் துரை, கவுன்சிலர் செல்வம், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் மா.முத்துக்குமார், வழக்கறிஞர் வேலுச்சாமி பாண்டியன், மாவட்ட மருத்துவர் அணி தலைவர் டாக்டர் மாரிமுத்து, பொதுக்குழு உறுப்பினர்கள்க.ராஜேஸ்வரன்,சாமித்துரை,மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ரஹீம், மேலகரம் பேரூராட்சி துணைத் தலைவர் ஜீவானந்தம், ராம்ராஜ், மாணவரணி மைதீன், குற்றாலம் ஜெய்சங்கர், மாநில பேச்சாளர் இஸ்மாயில், சிவநாடானூர் சமுத்திர பாண்டியன், குறும்பலாபேரி உதயசூரியன், மேலப்பாவூர் ராமர், கவுன்சிலர் வெங்கடேஸ்வரன், நகர இளைஞரணி அருண், வார்டு செயலாளர் வேல் ஐயப்பன், நவநீதகிருஷ்ணன், இசக்கி ரவி மற்றும் மகளிர் அணி சுசிலா ரவீந்திரன்,சாந்தி, சபர் நிஷா உள்ளிட்ட பலரும் திரளாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்

# சுதந்திர தின விழாவை முன்னிட்டு கண்ணார்பாளையம் கருணை இல்லத்தில் அன்னதானம் வழங்கிய "இயற்கை சுவாசம்" அமைப்பு




கோவை ஆக:17

இந்திய திருநாட்டின் 80வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு கோவை மாவட்டம் காரமடை,கண்ணார்பாளையம் அருகே உள்ள ஆதரவற்றோருக்கான கருணை இல்லத்தில் உள்ள சுமார் 60 நபர்களுக்கு "இயற்கை சுவாசம்" சமூக சேவை அமைப்பின் சார்பில் அசைவ உணவு வழங்கப்பட்டது.இதனை சிறப்பு ஏற்பாடு செய்து அந்த அமைப்பின் இயக்குனர் எம்,பிரேம்குமார் தலைமையில் சுதந்திர தின வாழ்த்து தெரிவித்து வழங்கப்பட்டது.

இதில் சிறப்பு அழைப்பாளராககாரமடைகாவல் துறை ஆய்வாளர் சி.முருகையன், துணை ஆய்வாளர் பூமணி அறக்கட்டளையின் நிர்வாகியும் சமூக ஆர்வலருமான ஜெ.அலெக்ஸ் ஆகியோர் கலந்து கொண்டு உணவு வழங்கி துவக்கி வைத்தார்கள். அதற்கு முன்,கருணை இல்லத்தின் காப்பாளர்கள் மற்றும் பயனாளிகள் அந்த அமைப்பின் பணிகள் சிறந்து வளர பிரார்த்தனை செய்து நன்றி தெரிவித்தார்கள்.

மேலும் இதில் கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர்கள் மற்றும் "இயற்கை சுவாசம்" அமைப்பினர்கள், அவர்களுடன் அமர்ந்து உணவருந்தி சிறப்பித்தார்கள். இந்நிகழ்வில் அறக்கட்டளையின்நிர்வாகிகள்சங்கர்,சி. பன்னீர்செல்வம் மற்றும் ஊர்க்காவல் படை விக்னேஷ் ஆகியோர் இருந்தார்கள்.

# கருங்குருவிக்கு உபதேசித்தலிலை



மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் ஆவணித் திருவிழா 2026 முதல்நாள் கருங்குருவிக்கு உபதேசித்த லீலை நடைபெற்றது.

# தக்கலை மார்க்கெட் பகுதியில் கஞ்சா விற்ற பழ வியாபாரி கைது

தக்கலை, ஆக. 17

தக்கலை மார்க்கெட் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் சட்ட விரோதமாக போதை பொருள்கள் விற்பனை நடைபெறுவதாக போலீசருக்கு தகவல் கிடைத்தது. இந்த தகவலின் அடிப்படையில் தக்கலை காவல் நிலைய உதவி ஆய்வாளர் சரவணகுமார் தலைமையிலான போலீசார் மார்க்கெட் பகுதியில் தீவிர கண்காணிப்பு மற்றும் சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அந்த பகுதியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நின்றிருந்த ஒரு வாலிபரை பிடித்து போலீசார் சோதனை செய்தனர்.

அந்த வாலிபர் எந்த வித அனுமதி இன்றி விற்பனைக்காக மறைத்து வைத்திருந்த 25 கிராம் கஞ்சாவை போலீசார் கையும் களவுமாக பறிமுதல்செய்தனர்.தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையில் பிடிபட்ட நபர் தக்கலை ராமன் பாம்பு பகுதியை சேர்ந்த அபிமோன் (29) என்பது தெரிய வந்தது. இவர் அந்த பகுதியில் பழ வியாபாரம் செய்து வரும் நிலையில் கஞ்சா விற்பனையிலும் ஈடுபட்டு வந்தது அம்பலமானது. தக்கலை போலீசார் போதைப்பொருள் தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து அவரை கைது செய்தனர்.

# நாகர்கோவிலில் ஓடும் பஸ்ஸில் பண்ணிடும் ரூ.40 ஆயிரம் திருட்டு போலீஸ் விசாரணை

நாகர்கோவில், ஆக.17

நாகர்கோவில் பறக்கை சிடிஎம் புரத்தைச் சேர்ந்தவர் சுந்தர் மனைவி முருகம்மாள் (39). இவர் வீட்டிலிருந்து நாகர்கோவில் உள்ள துணிக்கடைக்கு துணி எடுப்பதற்காக பஸ்ஸில் சென்றுள்ளார். செட்டிகுளம்பகுதியில்இறங்கி மீண்டும் கலெக்டர் அலுவலக பகுதிக்கு செல்வதற்காக மற்றொரு பஸ்ஸில் ஏறினார். அவர் பஸ்ஸில் இருந்து இறங்கும்போது தான்வைத்திருந்தபையில் இருந்த பர்ஸை காணவில்லை.

அதில் ரூபாய் 40 ஆயிரம் வைத்திருந்ததாக முருகம்மாள் தெரிவித்தார். பஸ்ஸில் கூட்ட நெரிசலை பயன்படுத்தி அதனை யாரோ திருடி சென்றது தெரியவந்துள்ளது. இது குறித்து நேசமணி நகர் போலீசில் முருகம்மாள் புகார் செய்தார். போலீஸார்வழக்குபதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

குமரியில் கூட்ட நெரிசலை பயன்படுத்தி பொது மக்களிடம் கைவரிசை காட்டும் சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. நகை மற்றும் பணம் திருட்டு சம்பவங்கள் அதிகரித்து வருவதால், மொழி மாவட்டங்களில் இருந்து வரும் கொள்ளையர்கள் இதில் ஈடுபட்டுள்ளது தெரியவந்துள்ளது. இதனை தடுக்க போலீஸ் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். பஸ்களில் பயணம் செய்யும் பொதுமக்கள் எச்சரிக்கையுடன் கவனமாக பயணம் செய்ய வேண்டும் என்று போலீசார் அறிவுறுத்தி உள்ளனர்.



# 80வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு பொள்ளாச்சி மின்னல் குழுமம் சார்பில் மாபெரும் அன்னதானம்

கோவை ஆக: 17

80வது சுதந்திர தின விழாவை முன்னிட்டும், த.வெ.க அரசின் 100 நாள் சாதனைகளை முன்னிட்டும் பொள்ளாச்சி மின்னல் குழும இயக்குனர் மின்னல் சீனிவாசன் அவர்களின் தலைமையில் மாபெரும் அன்னதான நிகழ்ச்சி நடைபெற்றது.

சமூகநல்லிணக்க நோக்கத்தில் நடைபெற்ற விழாவில் சுமார் 10,000 பொது மக்களுக்கு கல்யாண சாப்பாடு அன்னதான விருந்து நடைபெற்றது.

நிகழ்வில் பொள்ளாச்சி த.வெ.க சட்டமன்ற பொறுப்பாளர் பாலாஜி, நகர செயலாளர்கள் தர்மராஜ், அக்குபாய், தங்கராஜ், ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர். மேலும் அலையன்ஸ்கிளப் ஆஃப் இன்டர்நேஷனல் நிர்வாகிகள், மாரியம்மன் திருக்கோவில் பொறுப்பாளர்கள், த.வெ.க நிர்வாகிகள், மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்!

# சங்கரலிங்கபுரத்தில் சுதந்திர தின விழாவில் சுடுகாட்டில் குடியேறி போராட்டம்



விளாத்திகுளம் ஆகஸ்ட் 17.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள சங்கரலிங்கபுரம் கிராமத்தில் தலித் சமுதாய மக்கள்வசிக்கும் பகுதியில் 1922 ஆம் ஆண்டு, தங்களின் வழிபாட்டுத்தளத்திற்கு கல் மண்டபம் அமைத்து அந்தநிலத்தில் தேவாலயம் நடத்தி திருவிழாக்களை தற்போது வரை நடத்தி வருகின்றனர். அதேபோல் அந்த தேவாலயம் முன்பு பாதையை மறைத்து, ஊர் பொதுபாதையினை மாற்று சமுதாயத்தை சேர்ந்த ஒரு நபர் ஆக்கிரமிப்பு செய்து 1973 ஆம் ஆண்டில் மாடுகளை கட்டி வந்து பின்பு மாட்டு தொழுவத்தை கட்டினார். பின்பு மூன்றடி உயரத்திற்கு அந்த தீண்டாமை சுவர் கட்டினார், அந்த தீண்டாமை சுவற்றுக்கு 1994 ஆம் ஆண்டு விளாத்திகுளம் வருவாய்த்துறை கிராமம் நத்தம் நிலவரித் திட்டத்தில் பட்டா வழங்கப்பட்டுள்ளது. 3 அடி மன்சுவராக இருந்த தீண்டாமை சுவர் சில ஆண்டுகள் கழித்து 15 அடி உயரத்திற்கு கட்டியுள்ளனர், இந்த தீண்டாமை சுவரை அகற்றக் கோரியும் அந்த இடத்திற்கான பட்டாவை ரத்து செய்யக் கோரியும் பல ஆண்டுகளாக அப்பகுதியை சேர்ந்த தலித் சமுதாய மக்கள் போராடி வருகின்றனர். இந்தநிலையில் தான் கடந்த 2024 ஆம் ஆண்டு ஜூலை 24 ஆம் தேதி முதல் சங்கரலிங்கபுரம் தலித் சமுதாய மக்கள் தீண்டாமை சுவரை அகற்ற கோரியும், விளாத்திகுளம் வருவாய்துறை வழங்கிய முறைகேடான பட்டாவை ரத்து செய்யக் கோரியும், ஆக்கிரமிப்பு செய்துள்ள அந்த ஒரு ஏக்கர் நிலத்தை மீட்டு தர கடந்த மூன்று வருடங்களாக வருவாய்த்துறை அலுவலகம் முற்றுகை, குடியரசு தினம், சுதந்திர தினம் புறக்கணிப்பு உள்ளிட்ட போராட்டங்களை தொடர்ந்து மூன்றாண்டுகளாக நடத்தி வந்த நிலையில் தற்போது வரை இந்த பிரச்சனைக்கு தீர்வு எட்டாத நிலையில் மாலை 6 மணியளவில் இருந்து சுதந்திர தினத்தை புறக்கணித்தும் தற்போது வரை சங்கரலிங்காபுரம் கிராமத்தின் மேற்குப்பகுதியில் உள்ள சுடுகாட்டில் இரவு பகளாக குடியேறி, கைக்குழந்தைகளுடன்,அங்கேயே சமையல் செய்து,அங்கேயே உணவருந்தி போராட்டம் நடத்தி தங்களின் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர். ஆட்சியாளர்கள் மாறினாலும் தங்களின் பிரச்சினைக்கு தற்போது வரை முறையான தீர்வு கிடைக்கவில்லை என்றும், தீண்டாமை சுவரை அகற்றி நிலத்தை மீட்டு தர வேண்டும் என அப்பகுதி சங்கரலிங்கபுரம் கிராம தலித் சமுதாய மக்கள் கண்ணீர் மல்க அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

# விளாத்திகுளத்தில் தேவேந்திரர் குல வேளாளர் நல சங்கம் கல்வி பரிசளிப்பு விழா



விளாத்திகுளம் ஆகஸ்ட் 17

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளத்தில் தேவேந்திர குல வேளாளர் நலச்சங்கம் சார்பில் தாலுகா அளவில் 2026ம் ஆண்டு நடைபெற்ற அரசு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று சிறப்பிடம் பெற்ற பள்ளி மாணவ மாணவிகளுக்கு கல்வி பரிசு வழங்கும் விழா மற்றும் பாராட்டு விழா நடைபெற்றது. மாணவர்களின் கல்வி வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையிலும், பொதுத் தேர்வில் சிறப்பாக செயல்பட்ட மாணவ, மாணவிகளை பாராட்டும் விதமாகவும் நடைபெற்ற இந்த விழாவில், 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் முதல் ஐந்து இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு ரொக்கப் பரிசுகள் மற்றும் பாராட்டு வழங்கப்பட்டது. 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று முதல் இடம் பிடித்த கார்மேகம் என்பவருக்கு ரூ.14 ஆயிரம் பரிசுத் தொகை வழங்கப்பட்டது. இரண்டாம் இடம் பெற்ற விவேகானந்தனுக்கு ரூ.13 ஆயிரம், மூன்றாம் இடம் பெற்ற பொன்மதினிக்கு ரூ.12 ஆயிரம், நான்காம் இடம் பெற்ற கீர்த்தனாவுக்குரூ.11,ஆயிரம், ஐந்தாம் இடம் பெற்ற சூர்யா மகேஷுக்கு ரூ.10 ஆயிரம் பரிசுத் தொகையும் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் சிறப்பிடம் பெற்ற மாணவ, மாணவிகளுக்கும் கல்வி பரிசுகள் வழங்கப்பட்டன. 12ம் வகுப்பு தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற காயத்ரிக்கு ரூ.15 ஆயிரம், இரண்டாம் இடம் பெற்ற ராகவிக்கு ரூ.14 ஆயிரம், மூன்றாம் இடம் பெற்ற கார்த்திக் சோனியாவுக்கு ரூ.13 ஆயிரம், நான்காம் இடம் பெற்ற முவினாசுபிதாவுக்கு ரூ.12 ஆயிரம், ஐந்தாம் இடம் பெற்ற துளசிமாலாவுக்கு ரூ.11 ஆயிரம் பரிசுத் தொகை வழங்கப்பட்டது.

பரிசு பெற்ற மாணவமாணவிகளுக்கு விழாவில் கலந்து கொண்டவர்கள் வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்தனர். மேலும், தொடர்ந்து கல்வியில் சிறந்து விளங்கி உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்றும், தங்களது சாதனைகள் மூலம் சமூகத்திற்கும், பெற்றோருக்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. இந்த கல்வி பரிசளிப்பு விழாவில் தேவேந்திர குல வேளாளர் நலச்சங்க தலைவர், செயலாளர், பொருளாளர், இணைச் செயலாளர், ஒருங்கிணைப்பாளர்கள், நிர்வாகக்குழு உறுப்பினர்கள், நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாணவ–மாணவிகளின் பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தருமபுரியில் 80வது சுதந்திர தின விழா – வேளாண்மை துறை அலுவலர்களுக்கு நற்சான்றிதழ் வழங்கிய ஆட்சியர்



தருமபுரி ஆகஸ்ட் 17

தருமபுரி மாவட்ட விளையாட்டு மைதானத்தில் நாட்டின் 80வது சுதந்திர தின விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. விழாவில் மாவட்ட ஆட்சியர் வே. சரவணன் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, போலீசாரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். முன்னதாக, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.கே. அருண்கபிலன், மாவட்ட ஆட்சியரை கொடி மேடைக்கு அழைத்து வந்தார். தேசியக் கொடியேற்றத்தைத் தொடர்ந்து, வண்ண பலூன்களை வானில் பறக்கவிட்டு சுதந்திர தின வாழ்த்துகளை மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார். இதையடுத்து, சுதந்திரப் போராட்டதியாகிகளுக்கு மாவட்ட ஆட்சியர் வே. சரவணன் பொன்னாடை அணிவித்து கவுரவித்தார். தொடர்ந்து, அரசுத்துறைகளில் சிறப்பாக பணியாற்றிய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பாராட்டு தெரிவித்து நற்சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இதில் வேளாண்மைத் துறையில் சிறப்பாக பணியாற்றிய வேளாண்மை துணை இயக்குனர் ராஜகோபால், வேளாண்மை அலுவலர் அனுசுயா, உதவி விதை அலுவலர் குமரேசன், உதவியாளர் சிவராஜ், தட்டச்சர் பரிமளா உள்ளிட்டோருக்கு மாவட்ட ஆட்சியர் நற்சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார். விழாவின் நிறைவாக அரசு மற்றும் தனியார் பள்ளிகளைச்சேர்ந்தமாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாணவர்களின் தேசப்பற்று மற்றும் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் கலை நிகழ்ச்சிகள் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தன.



# பொள்ளாச்சி சதுரங்க சங்கம் சார்பில் சுதந்திர போராட்ட வீரர்களுக்கு புகழ் வணக்கம்!!!

கோவை ஆக: 17 இந்திய சுதந்திரத்திற்காக அரும்பாடுபட்ட சுதந்திர போராட்ட தியாகிகளை போற்றும் வகையில் பொள்ளாச்சி சதுரங்க சங்கம் சார்பில் சுதந்திர போராட்ட வீரர்களின் புகைப்படங்களுக்கு மலர் தூவி வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சிக்கு உள்ளாட்சி சதுரங்க சங்க செயலாளர் பரமேஸ்வரன் தலைமை வைத்தார். சிறப்பு விருந்தினர்களாக பொள்ளாச்சி நகர மன்ற தலைவர் சியாமளா நவநீதகிருஷ்ணன்கலந்து கொண்டார்.

தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு உதவித்தொகை500க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்களுக்கு நோட்டு, புத்தகங்கள், மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

# தென்தாமரைகுளம் எல்.எம்.எஸ். மேல்நிலைப் பள்ளியில் நடப்பு கல்வி ஆண்டிற்கான நாட்டு நலப்பணி திட்ட துவக்க விழா




தென்தாமரைகுளம். ஆக17

தென்தாமரைகுளம் எல்.எம்.எஸ். மேல்நிலைப் பள்ளியில் நடப்பு கல்வி ஆண்டிற்கான நாட்டு நலப்பணி திட்ட துவக்க விழா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு பள்ளியின் தாளாளர் கால்வின் தலைமை வகித்து த லைமை யுரையா ற்றினார். பள்ளி தலைமையாசிரியை அனு ஜெ. பிரீதா முன்னிலை வகித்து வாழ்த்துரையாற்றினார். பள்ளியின் பாடகற் குழுவினரால் இறை வணக்க பாடல் பாடப்பட்டது. மாணவி ஏஞ்சலின் கிறிஸ்டி அனைவரையும் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக அகஸ்தீஸ்வரம் விவேகானந்தா கல்லூரியின் தமிழ்துறை பேராசிரியரும் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலருமான முனைவர். ஜெயகுமாரி கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கு பயனளிக்கும் வகையில் பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்தார்கள். நிகழ்ச்சிகளின் இடையிடையே மாணவிகளின் கலை நிகழ்ச்சி நடைபெற்றன. நிறைவில் மாணவி சஞ்சனா நன்றி கூறினார். என்.எஸ். எஸ் திட்ட அலுவலர் மேபல் புஷ்ப ரதி நிகழ்சிகளை தொகுத்து வழங்கினார்கள். நிகழ்ச்சியில் மாணவ, மாணவிகளும், ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.



# சுதந்திர போராட்ட வீரர் அனந்த பத்மநாபன் நாடார் சமாதியில் பாஜக சார்பாக புஷ்பாஞ்சலி

மார்த்தாண்டம், ஆக.17

நாட்டின் 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு குமரி மேற்கு மாவட்ட பாஜக சார்பில், கட்சியின் மாவட்ட தலைவர் ஆர் டி சுரேஷ் தலைமையில் காட்டாத்துறையில் உள்ள சுதந்திர போராட்ட வீரர் அனந்த பத்மநாப நாடார் சமாதியில் புஷ்பாஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் அனந்த பத்மநாபன் நாடார் வாரிசுகள் மற்றும் பாஜகவினர் கலந்து கொண்டு அவரது சமாதி மற்றும் குதிரை மேல் அமர்ந்து இருக்கும் அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்

அனந்தபத்மநாபன் நாடார் சுதந்திர போராட்டத்தில் டச்சு படையை எதிர்த்து திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் சார்பில் மார்த்தாண்ட வர்மா மகாராஜாவின் போர்ப்படை தளபதியாக இருந்து போராடி, வேலுதம்பி தளபதி தலைமையில் போர் செய்து டச்சு படையை சேர்ந்த தளபதி டிலனாயை சிறைபிடித்து அவரை வைத்தே ஆங்கிலேயருக்கு எதிராக போராடிய வீரர் அனந்த பத்மநாபன் ஆவார்.

ஆய கலைகள் அனைத்தும் கற்று தேர்ந்த மகா வீரனை போற்றும் வகையில் சுதந்திர தினத்தை முன்னிட்டு அவரது சமாதியில் புஷ்பாஞ்சலி நிகழ்ச்சி பாஜக சார்பில் நடைபெற்றது .

நீரை சேமிப்போம்!
மரங்களை வளர்ப்போம்!
பூமிக்கு உயிர் கொடுப்போம்!

# ராமன்துறையில் சுதந்திர தினத்தையொட்டி மீனவர் காங்கிரஸ் சார்பில் நல உதவிகள்



புதுக்கடை, ஆக.17 நாட்டின் 80வது சுதந்திர தினத்தையொட்டி மீனவர் காங்கிரஸ் சார்பில் ராமன்துறை மீனவ கிராமத்தில் நலதிட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இனயம் புத்தன்துறை ஊராட்சி மீனவர் காங்கிரஸ் தலைவர் ராபர்ட் தலைமையில், இனயம் புத்தன்துறை ஊராட்சி காங்கிரஸ் தலைவர் ஸ்டாலின் முன்னிலையில் தமிழ் நாடு மீனவர் காங்கிரஸ் தலைவர் ஜோர்தான் நல உதவிகளை வழங்கினார்.

அங்கன்வாடி பள்ளிக்கு கேஸ் அடுப்பு, மீன் விற்பனை செய்யும் மீனவ பெண்களுக்குநிழல்தரும் ராட்சத குடைகள், மீன் சருவம் மற்றும் ஏழைகளுக்கு 5கிலோ அரிசி பாக்கட் என50 மீனவர்களுக்கு வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் கீழ்குளம் பேரூராட்சி காங்கிரஸ் தலைவர் ராஜகிளன், இனயம்புத்தன்துறைஊராட்சி காங்கிரஸ் ஓபிசி துறை தலைவர் தேவதாசன், குமரி மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை துறை முன்னாள்அமைப்பாளர் சவுகத் அலி.மற்றும் அல்போன்ஸ், பங்கிராஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்

# குழித்துறை வாவுபலி கண்காட்சி ராட்டினம் விபத்து; மார்த்தாண்டம் டி.எஸ்.பி அலுவலகத்தில் இந்து முன்னணி புகார்

மார்த்தாண்டம், ஆக.17 குழித்துறை நகராட்சி சார்பில் ஆடி அமாவாசை முன்னிட்டு 101 வது வாவுவெலி பொருள்கண்காட்சி கடந்த 19 நாட்களாக நடைபெற்று வந்தது. நேற்று முன்தினம் ரயில் ராட்டினம் கவிழ்ந்த விபத்தில் 10 வயது சிறுமி உட்பட்ட ஏழு பேர் காயமடைந்தனர். அவர்களுக்கு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை நடைபெற்று வருகிறதுa இதனிடையே இந்து முன்னணி மாவட்ட தலைவர் ஆறுமுகம் தலைமையில் மார்த்தாண்டம் டி.எஸ்.பி அலுவலகத்தில் புகார் அளித்துள்ளனர். இந்த கண்காட்சி பாதுகாப்பு இல்லாத நிலையில் ஆண்டு தோறும் நடைபெற்று வருவதாகவும், அளவுக்கு அதிகமான ஆட்கள் சிறிய பகுதியில் கூடுவதால் விபத்து ஏற்பட்டால் பெரிய அளவில் உயிர்சேதம் ஏற்படும் அபாயம்உள்ளது.ஆகவே இது குறித்து ஆண்டு



தோறும் பொதுப்பணித் துறை, தீயணைப்பு துறை மற்றும் நகராட்சி க்கு இந்து முன்னணி புகார் அளித்து வருகிறது. இந்த ஆண்டுஅளித்தபுகாருக்கு பொது பணித்துறை இதற்கும்அந்ததுறைக்கும்எந்த தொடர்பும் இல்லை என்று அலட்சியமாக பதில் அளித்தனர். இந்த பகுதியில் ராட்டினங்கள் அமைக்க பொதுப்பணித் துறை தான் அனுமதி அளிக்க வேண்டும். ஆடி அமாவாசை முதாதையர்களுக்கு திதி கொடுக்க துவங்கப்பட்ட இந்த நிகழ்வு தற்போது வியாபார நோக்கில் எந்த வித பாதுகாப்பு விதிமுறைகளை கடைபிடிப்பது இல்லை. ஆகவே இதுசம்மந்தமான துறை அதிகாரிகள்மீதுவழக்குதொடர்ந்து நடவடிக்கை எடுக்கவும் காயமடைந்து சிகிச்சை பெற்று வருவோருக்கு நிவாரணம் வழங்க கேட்டு டி.எஸ்.பி அலுவலகத்தில் இந்து முன்னணியினர் புகார் அளித்தனர். மாவட்ட செயற்குழு உறுப்பினர் செல்வநாயகம், குழித்துறை நகர தலைவர் வினுகுமார், உட்பட பலர் கலந்து கொண்டனர்

# திருப்பூரில் மதிமுக புதிய நிர்வாகிகள் மூத்த தலைவர்களின் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை



திருப்பூர், ஆக 17 மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் திருப்பூர் மாநகர் மாவட்டத்திற்கு புதிய நிர்வாகிகளை மதிமுக தலைவர்.வைகோ அவர்கள் அறிவித்தார். அதனை தொடர்ந்து புதிய நிர்வாகிகளாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் மூத்த தலைவர்களின் திரு உருவச் சிலைகளுக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி மாநகர் மாவட்ட செயலாளர். கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.முன்னதாக மதிமுக நிர்வாகிகளுடன் ரயில் நிலையம் அருகே உள்ள தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, அண்ணல் அம்பேத்கர் மற்றும் தியாகி குமரன் ஆகியோரின் திரு உருவச் சிலைகளுக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்ச்சியில் மாநகர் மாவட்டத்தின் புதிய நிர்வாகிகளும் மாநில நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

# காமன்வெல்த் வாள்வீச்சு போட்டியில் 2 தங்கம் வென்ற குமரி வாலிபருக்கு சொந்த ஊரில் உற்சாக வரவேற்பு



மார்த்தாண்டம், ஆக.17

குமரி மாவட்டம் தேமானூர் பகுதியைச் சேர்ந்தவர் ஷெர்ஜின். இவர் நைஜீரியாவில் கடந்த 9ஆம் தேதி முதல் 14ஆம் தேதி வரை நடைபெற்ற காமன் வெல்த் வாள்வீச்சு போட்டியில் 'யெப்பி' பிரிவில் பங்கேற்றார். இதில் தனிநபர் பிரிவு மற்றும் குழு பிரிவு ஆகிய இரண்டிலும் அபார திறமையை வெளிப்படுத்தி 2 தங்கப் பதக்கங்களை வென்று நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளார். போட்டிகள் முடிந்து நேற்று முன்தினம் தாயகம் திரும்பிய அவருக்கு, ஆற்றூர் பகுதியில் குடும்பத்தினரும் உறவினர்களும் பொன்னாடை மற்றும் சால்வைகள் அணிவித்தும், பூங்கொத்துகள் வழங்கியும், பட்டாசுகள் வெடித்தும் உற்சாக வரவேற்பு அளித்தனர். இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களி டம் பேசிய ஷெர்ஜின் : இதுவரை தேசிய அளவிலான போட்டிகளில் 60 பதக்கங்களையும், சர்வதேச அளவிலான போட்டிகளில் 7 பதக்கங்களையும் வென்றுள்ளேன். எனது அடுத்த இலக்கு 202 8ஆம் ஆண்டு நடைபெ றவுள்ள ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்று பதக்கம் வெல்வதுதான். அதற்காக தீவிர பயிற்சிகளை மேற்கொள்ள திட்டமிட்டு ள்ளேன். விளையாட்டுத்துறை சார்பாக அரசு தற்போது வழங்கி வரும் உதவிகளுக்கு நன்றி. இருப்பினும், ஒலிம்பிக் போட்டிக்கு தயாராக இன்னும் அதிகமான உதவிகளையும் ஊக்குவிப்பையும் அரசு வழங்கினால்,

இன்னும் சிறப்பான சாதனைகளை படைக்க முடியும்" எனத் தெரிவித்தார்.



ஈரோடு திண்டல் வேலாயுதசாமி திருக்கோயிலில் சுதந்திர தினத்தையொட்டி நடைபெற்ற சமபந்தி விருந்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் கந்தசாமி கலந்துகொண்டு பொது மக்களுடன் அமர்ந்து உணவருந்தினார். இதில் மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் சண்முகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பெரிய கரடியூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் 80வது சுதந்திர தின விழா




கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அருகே உள்ள பெரிய கரடியூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் 80வது சுதந்திர தினவிழாவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்கும் விதமாக அமைந்த சுபவேளையில், பள்ளித் தலைமை ஆசிரியர் சுரேஷ் தலைமை தாங்கினார்

இந்நிகழ்விற்கு பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் தலைவர். எம். பிரகாஷ். MCA.M. Phil. அவர்கள் பள்ளி வளாகத்தில் தேசிய கொடியை ஏற்றி மரியாதை செலுத்தினர் வி. பிரபாகரன் துணைத் தலைவர், எஸ். சாமிநாதன் கௌரவத் தலைவர், பி. ஜெகன், இணைச்செயலாளர் எம். ஆனந்தன் பொருளாளர், கல்வியாளர்கள்.K. தனபால். M. சங்கர். தன்னார்வலர்கள்.N. அருண்ராஜ். R. திலகேஷ். செயற்குழு உறுப்பினர்கள். T. சமரசம். M. சென்னையன்.லவ் கேஷன். P. ஜெயக்குமார். S. அலெக்ஸ். P. வெங்கடாஜலபதி.M. பிரபாகரன். M. அருண்குமார்.C. மணிகண்டன்.ஆகியோர் முன்னிலை வகித்தனர் விழாவில் சிறப்பு விருந்தினராகச் சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் ராஜேஸ்வரி கார்த்திகேயன் கலந்துகொண்டார். அவர் மாணவர்களிடையே உரையற்றி, சுதந்திர தினத்தின் முக்கியத்துவம், தியாகிகளின் அர்ப்பணிப்பு மற்றும் நாட்டின் எதிர்கால சிற்பிகளாக மாணவர்கள் திகழ வேண்டியதன் அவசியத்தைக் குறித்து எழுச்சியூட்டும் வகையில் பேசினார். அதனைத் தொடர்ந்து, பள்ளி மாணவமாணவிகளின் வண்ணமயமான கலை நிகழ்ச்சிகள் நடைபெற்று விழாவிற்கு மேலும் பெருமை சேர்த்தன.

இந்நிகழ்ச்சியில் இருபால் ஆசிரியர்கள், பள்ளி மாணவமாணவிகள் மற்றும் பெற்றோர்கள் திரளாகக் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பித்தனர். முன்னிலை வகித்து விழாவினைச் சிறப்பித்தனர்

# பாலக்கோடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் சுதந்திர தின விழா

தருமபுரி ஆகஸ்ட் 17 தருமபுரி மாவட்டம் பாலக்கோடு அக்ரகாரம் தெருவில் உள்ள ஊ.ஒ.தொ. பள்ளியில் 80 வதுசுதந்திரதினவிழாவை முன்னிட்டு பள்ளியின் தலைமை ஆசிரியர் தேசிய கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். பின்னர் மாணவ, மாணவிகள் மற்றும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது. இதனைத் தொடர்ந்து மாணவ ,மாணவிகளுக்கு போட்டிகள் நடைபெற்றது. இதில் சுதந்திரம் பெற்றுக் கொடுத்த தியாகிகள் நாடகம். கட்டுரைப் போட்டி. பேச்சுப் போட்டி என பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ ,மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. விழாவில் பெற்றோர் சங்கத் தலைவர்கள் தண்டாயுதபாணி, .எஸ்.எம்.எஸ் குழு தலைவர் விமலன், பெற்றோர் சங்க துணைத் தலைவர் சண்முகம், ஆசிரியர்கள் மற்றும் முன்னாள் மாணவர்கள் சமூக ஆர்வலர் பி.கே. சிவா, வேலு, மாணவர்களின் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.




# செல்லகுட்டபட்டியில் சுதந்திர தின விழா: 200 மரக்கன்றுகள் நட்டு, 500 பனை விதைகள் விதைத்து வி .தா.லீடர்ஸ் அசத்தல் !




கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி தாலுக்கா, பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட செல்லகுட்டபட்டி கிராமத்தில், நாட்டின் சுதந்திர தின விழாவை முன்னிட்டு வி.தா. லீடர்ஸ் அமைப்பு சார்பில் பிரம்மாண்ட பசுமைத் திருவிழா நடைபெற்றது. கிராமத்தின் சுற்றுச்சூழல் வளத்தைப் பெருக்கும் நோக்கில் அமைக்கப்பட்ட இந்நிகழ்ச்சி, தன்னார்வலர் சக்திவேல் ராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இதில் கிராமத்தைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட நிழல்தரும் மரக்கன்றுகள் ஆர்வத்துடன் நட்டப்பட்டன. மேலும், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தவும் ஏரிக்கரையைப் பலப்படுத்தவும், அப்பகுதியில் உள்ள ஏரிக்கரையில் 500க்கும் மேற்பட்ட பனை விதைகள் விதைக்கப்பட்டன. சுதந்திர தின நாளில் தாய் மண்ணைப் பசுமையாக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட இச்சேவை அப்பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. இந்நிகழ்ச்சியில் லாடு சிவகுமார், ஆனந்தராஜ் உள்ளிட்ட வி.தா.லீடர்ஸ் அமைப்பின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் செல்லகுட்டபட்டி கிராம மக்கள் திரளாகக் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டுச் சிறப்பித்தனர்



கோவையில் தீத்திபாளையம் ஊராட்சியில் தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் ஒன்றிணைந்து 80 ஆவது சுதந்திர தின விழாவை முன்னிட்டு தேசியக்கொடி ஏற்றி மரியாதை செய்து மற்றும் பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கி மிகச் சிறப்பாக கொண்டாடினர், மேலும் தீத்திபாளையம் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் தமிழக வெற்றிக் கழக தீத்திபாளையம் ஊராட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டு பொதுமக்கள் சார்பாக பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்தனர்.

# கண்மாய் கரையில் தேசியக்கொடியினை தவெக நிர்வாகியை ஏற்ற வைத்த ஊராட்சி செயலர்

## அதிருப்தி அடைந்த பொதுமக்கள், நடவடிக்கை எடுப்பாரா? ஆட்சியர்



சிவகங்கை, ஆக.17

இந்திய சுதந்திர தினம் நாடு முழுவதும் நேற்று கொண்டாடப்பட்டது. சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வேங்காவயல் ஊராட்சியிலும் சுதந்திர தின விழா நடைபெற்றது. அங்குள்ள கண்மாய் கரையில் தேசியக்கொடி ஏற்றுவதற்காக ஊராட்சி நிர்வாகம் தற்காலிக கம்பம் அமைத்திருந்தது.

இந்நிலையில், தமிழக வெற்றிக்கழக நிர்வாகி ஒருவர் தேசியக்கொடியை ஏற்ற ஊராட்சி செயலர் அனுமதி வழங்கியதாக கூறப்படுகிறது. அரசியல் கட்சி பிரமுகர் ஒருவர் தேசியக்கொடியை ஏற்றியது அப்பகுதியில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது, 'வளர்ச்சிஅடைந்த பாரதம்' மற்றும் கிராம வேலைஉறுதிதிட்டத்தின் கீழ் அமிர்த சரோவர் திட்டத்தில் நீர்நிலைகளை பாதுகாக்கும் நோக்கில் குளங்களில் தேசியக்கொடி ஏற்ற மாவட்ட ஆட்சியர் சுற்றறிக்கை அனுப்பியுள்ளதாக தெரிவித்தார். அதன்படி ராணுவ வீரர், முன்னாள் ராணுவ வீரர், பத்ம விருது பெற்றவர் அல்லது அப்பகுதியைச் சேர்ந்த மூத்த குடிமகன் தேசியக்கொடியை ஏற்றலாம் என கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், திட்ட வழிகாட்டுதலுக்கு மாறாக கண்மாய் கரையில் அரசியல் கட்சி நிர்வாகியை அழைத்து தேசியக்கொடி ஏற்றியதாக ஊராட்சி செயலர் மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.



# அறநிலையத்துறையின் சுதந்திரதின சம்பந்தி விருந்தில் அமைச்சர் பெ.விஸ்வநாதன் பங்கேற்பு

சென்னை அகஸ்ட், 17,

இந்தியாவின் சுதந்திரதினமான ஆகஸ்ட் 15 தேதியன்று ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு இந்து அறநிலையத்துறை சார்பாக பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்குவது வழக்கமாக உள்ளது. அதேபோல் சென்னை முழுவதிலும் உள்ள இந்து அறநிலையத்துறைக்கு உட்பட்ட திருக்கோயில்களில் நடக்கும் அன்னதான நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கலந்து கொண்டு உணவு பரிமாறுவதும், சமபந்தி விருந்து அருந்துவதும் வாடிக்கையானதே.

இந்த ஆண்டு 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு உயர்கல்வித்துறை அமைச்சர் பெ. விஸ்வநாதன் சென்னை கோயம்பேடு குறுங்காலீஸ்வார் கோயில் விருந்தோம்பலில் கலந்து கொண்டு உணவருந்தினார்.,

உடன் தென் சென்னை மத்திய மாவட்ட காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஜோதி பொன்னம்பலம் தவெக விருகை பகுதி செயலாளர் ஜி.மணிகண்டன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# குழித்துறை வாவுபலி பொருட்காட்சி விபத்து பக்க காட்சி காண்ட்ராக்டர் உட்பட 4 பேர் மீது வழக்கு

மார்த்தாண்டம்

ஆக 17




குழித்துறை நகராட்சியால் நடத்தப்படும் 101 வது வாவுபலி பொருட்காட்சி கடந்த 29 ம் தேதி ஆரம்பமாகி இன்று 17ம் தேதியோடு நிறைவடைகிறது. இன்று மாலை நிறைவு விழா நடக்கிறது. பக்க காட்சியை குழித்துறையைச் சேர்ந்த தொழிலதிபர் விஜயலால் என்பவர் 2 கோடியே 17 லட்சம் ரூபாய்க்கு முதல் முறையாக ஏலம் பிடித்தார். பொருட்காட்சி மைதானத்தில் உள்ள டிராகன் ரயில் பக்க காட்சியில் ஆறு பெட்டி காணப்பட்டது. நேற்று முன்தினம் மாலை எதிர்பாராத விதமாக ஒரு பெட்டி கீழே விழுந்தது.

இதிலிருந்த முழுக்கோட்டை சேர்ந்த ஐந்து பேர் காயமடைந்தனர். இவர்கள் கழுவன் திட்டை தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதனை தொடர்ந்து மாவட்ட கலெக்டர் பிரவீன் மற்றும் மாவட்ட எஸ்.பி ஸ்டாலின் உத்தரவின் பேரில் நேற்று முன்தினம் மாலை 6 மணியிலிருந்து பொருட்காட்சி மூடப்பட்டது. இரண்டாவது நாளாக நேற்றும் மூடப்பட்டது

பக்க காட்சி மற்றும் அனைத்து கடைகளும் மூடப்பட்டது. நேற்று பிற்பகல் வரை பொதுமக்கள் கூட்டம் இல்லாமல் வெறிச்ஜோடி காணப்பட்டது. ஆனால் மாலையில் பொதுமக்கள் வந்து ஏமாந்து திரும்பி சென்றனர். பொருட்காட்சி திடலுக்கு வெளியே உள்ள கடைகளில் பொருட்கள் வாங்கிச் சென்றனர்

விபத்து தொடர்பாக களியக்காளை போலீசார் உத்திரபிரதேசம், கண்டகநகர் பகுதியை சேர்ந்த சமீர்(20), திருச்சூர்சாலக் குளத்தைச் சேர்ந்த சசிகுமார் (69) , பக்க காட்சி காண்ட்ராக்டர் குழித்துறை பிலவிளையை சேர்ந்த விஜயலால் (53), மற்றும் நகராட்சி நிர்வாத்தின் மீதும் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்

# கன்னியாகுமரியில் கல்லூரிகளுக்கிடையேயான சர்வதேச கருத்தரங்கு




கன்னியாகுமரி, ஆக.17

ஆப்பிரிக்காவின் ஜாம்பியா நாட்டில் உள்ள ஈடன்பெர்க் பல்கலைக்கழகம், நாகர்கோவில் எஸ்.டி.இந்து கல்லூரியின் பொருளாதாரத் துறை, நாகர்கோவில் டபிள்யூ.சி.சி. கல்லூரியின் ஆங்கிலத் துறை, சுங்கன்கடை ஸ்ரீ அய்யப்பா மகளிர் கல்லூரியின் கணிதத் துறை மற்றும் கேரளா வயநாடு டான் போஸ்கோ கல்லூரியின் வணிகவியல் துறை ஆகிய கல்வி நிறுவனங்கள் இணைந்து நடத்திய சர்வதேச மாநாடு கன்னியாகுமரியில் நடைபெற்றது.

மேம்பட்ட பன்முகத் தன்மை ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகள் என்ற தலைப்பில் இம்மாநாடு ஒருங்கிணைக்கப்பட்டது. கோழிக்கோடு அரசு சட்டக் கல்லூரியின் மேலாண்மைத் துறை உதவிப் பேராசிரியர் டாக்டர் சநிதா கே. கே. வரவேற்புரை ஆற்றினார். கேரளா வயநாடு டான் போஸ்கோ கல்லூரி முதல்வர் அருட்தந்தை டாக்டர் ஷாஜன் நொரோன்ஹா மற்றும் அகத்தீஸ்வரம் விவேகானந்தா கல்லூரி வணிகவியல் துறைத் தலைவரும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழக செனட் உறுப்பினருமான டாக்டர் ஆர்.தர்ம ரஜினி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

ஆப்பிரிக்காவின் ஈடன்பெர்க் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் அப்போஸ்டி மைக்கேல் டெம்போ மற்றும் பதிவாளர் டாக்டர் எவாரிஸ்டோ சோலா ஆகியோர் மாநாட்டின் முதன்மை உரையை வழங்கினர். பெங்களூரு கிறிஸ்ட் பல்கலைக்கழக மேலாண்மைப் பள்ளி இணைப் பேராசிரியர் டாக்டர் ராஜ்வீர் எஸ். ராவ்லின் சிறப்புரையாற்றினார். தொடர்ந்து, சென்னை அன்னை வேளாங்கண்ணி கல்வி நிறுவனங்களின் மேலாண் இயக்குநர் ஜானி கிறிஸ்டோபர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார். தென்காசி ஜே.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் டாக்டர் ஆர். சிவநேசன் வாழ்த்திப் பேசினார்.

இம்மாநாட்டில் பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளைச் சேர்ந்த பேராசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவமாணவிகள் கலந்துகொண்டு, தங்களது தனித்துவமான 537 சிறந்த ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர். இந்த ஆய்வுக் கட்டுரைகள் அனைத்தும் தொகுக்கப்பட்டு, 15 தொகுதிகள் கொண்ட மாநாட்டுப் புத்தகங்களாக விழாவில் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டன.

காலை 11:30 மணி முதல் பல்வேறு தொழில்நுட்ப அமர்வுகள் நடைபெற்றன. நவீன உலகின் சவால்களுக்கு பன்முகத் தன்மை கொண்ட ஆராய்ச்சிகள் எவ்வாறு தீர்வாக அமையும் என்பதை விளக்கும் வகையில் இந்த சர்வதேச மாநாடு அமைந்திருந்தது . மாநாட்டிற்கான விரிவான ஏற்பாடுகளை மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் டாக்டர் இ. ஜோசப் ரூபர்ட் மற்றும் உதவிப் பேராசிரியர்கள் டாக்டர் தங்க ஷீலா, டாக்டர் அமுதா, டாக்டர் சந்தியா, டாக்டர் ஆர். ஷீலா, டாக்டர் சுகிதா, செல்வி அபிலாஷா, செல்வி சிவசக்தி ஆகியோர் செய்திருந்தனர். நிறைவாக, அருணாச்சலா மகளிர் பொறியியல் கல்லூரி மேலாண்மைத் துறை இணைப் பேராசிரியர் செல்வி ஹரிஷ்மா நன்றியுரை கூறினார்.

# தமிழகத்தில் சிறந்த செயல்பாடுகளில் தஞ்சாவூர் மாநகராட்சி 2வது இடம் ஆணையர் தீபனா விஸ்வேஸ்வரி பேட்டி



தமிழகத்தில் மாநகராட்சிகளின் சிறந்த செயல்பாடுகளில் தஞ்சாவூர் மாநகராட்சி 2ம் இடம் பெற்றுள்ளதாக மாநகராட்சி ஆணையர் தீபனா விஸ்வேஸ்வரி தெரிவித்தார்.

தஞ்சாவூர் மாநகராட்சி அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் உள்ள மாநகராட்சிகளின் செயல்பாடுகள் குடிநீர், பாதாள சாக்கடை பராமரிப்பு, திடக்கழிவு மேலாண்மை, பொது சுகாதாரம், நகர்ப்புற திட்டமிடல், மின்னாளுமை, சுற்றுச்சூழல், காலநிலை நடவடிக்கைகள், பொது மக்கள் பங்கேற்பு உள்ளிட்ட 12 முக்கிய அம்சங்களின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டதாக கூறினார். இதில் தஞ்சாவூர் மாநகராட்சி 70 சதவீதத்துக்கும் அதிகமான மதிப்பெண்கள் பெற்று 2ம் இடத்தை பிடித்துள்ளது. மாநகரில் நாய்களின் தொல்லையை கட்டுப்படுத்த கருத்தடை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாநகராட்சி சார்பில் ரத்த வங்கி மற்றும் முதலமைச்சர் படிப்பகம் அமைக்கப்பட்டு வருகிறது. அனுமதியின்றி வைக்கப்படும் விளம்பர பதாகைகள் அகற்றப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

ஜெபமாலைபுரம் குப்பைக்கிடங்கில் குப்பை கொட்டுவது நிறுத்தப்பட்டுள்ளதால், மாநகரில் 263 இடங்களில் குப்பைகள் தரம் பிரிக்கப்படுகின்றன. மக்கும் குப்பைகள் உரத்திற்கும், மக்காத குப்பைகள் சிமெண்ட் நிறுவனங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. பொது இடங்களில் குப்பை கொட்டுவதை தடுக்க வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் இருந்து நேரடியாக குப்பைகள் சேகரிக்கப்படுவதாகவும் ஆணையர் தெரிவித்தார்.

# நாகர்கோவில் கோர்ட்டில் மாமனாரை செருப்பால் அடித்த மருமகள் விவாகரத்து பேச்சுவார்த்தையின் போது பரபரப்பு

நாகர்கோவில்,

ஆக. 17

நாகர்கோவில்மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் உள்ள சமரச மையத்தில் சென்னை சேர்ந்த ஓய்வு பெற்ற அரசு ஊழியரான சுயம்புலிங்க (62) என்பவர் மகனுக்கும், ஆகஸ்தீஸ்வரத்தை சேர்ந்த அபினய பூமதி (26) என்பவர்களிடையே விவாகரத்து வழக்கு நிலுவையில் உள்ளது. இது தொடர்பான பேச்சுவார்த்தைக்காக இருதரப்பினரும் நீதிமன்ற வளாகத்தில் கூடியிருந்தனர். அப்போது திடீரென ஏற்பட்ட வாக்குவாதத்தில் ஆக்கிரமடைந்த அபினய பூமதி தனது மாமனார் சுயம்புலிங்கத்தை ஆபாசமாக திட்டியதுடன், தனது காலில் கிடந்த செருப்பை கழற்றி அவரை சாரமாரியாக தாக்கியதாக கூறப்படுகிறது. இதில் காயமடைந்த அவர் குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். சுயம்பு லிங்கம் அளித்த புகாரின் பேரில் மருமகள் அபினய பூமதி மற்றும் அவரது தந்தை ராஜன், தாயார் நல்லமுத்து ஆகிய மூன்று பேர் மீது கோட்டாறு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கன்னியாகுமரியில் கடல் நீர்மட்டம் தாழ்வு 5 மணி நேரம் தாமதமாக படகுகள் இயக்கம்

கன்னியாகுமரி, ஆக.17

பிரசித்தி பெற்ற சுற்றுலாத் தலமான கன்னியாகுமரிக்கு தினமும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். அவ்வாறு வரும் சுற்றுலா தலமான முக்கடல் சங்கமத்தில் புனித நீராடி பகவதி அம்மன் கோவிலில் சாமி தரிசனம் செய்வார்கள். பின்னர் கடலில் அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபம் 133 அடி உயர திருவள்ளுவர் சிலை ஆகியவற்றை படகில் சென்று பார்த்துவிட்டுதிரும்புவது வழக்கம்.

இதற்காக பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் தினமும் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை இடைவேளையின்றி படகுகளை இயக்கி வருகிறது. நேற்று வழக்கம் போல் காலை 8 மணிக்கு தொடங்கவேண்டிய படகு போக்குவரத்து கடலில் அலை மற்றும் நீர் மட்டம் தாழ்வு காரணமாக தொடங்கவில்லை. பின்னர் பிற்பகல் 1 மணியளவில் கடல் நீர்மட்டம் சகஜ நிலைக்கு திரும்பியதைத் தொடர்ந்து படகு சேவை 5 மணி நேரம் தாமதமாக தொடங்கியது.

அதனைத்தொடர்ந்து சுற்றுலா பயணிகள் உற்சாகமாக படகில் சென்று விவேகானந்தர் நினைவு மண்டபம் மற்றும் கண்ணாடி இழை கூண்டு பாலம் வழியாக நடந்து சென்று திருவள்ளுவர் சிலையை பார்த்துவிட்டு திரும்பினர்.

# கிருஷ்ணகிரியை அடுத்த வெண்ணம்பள்ளிஅரசு உயர்நிலைப்பள்ளியில் 80வது சுதந்திர தின விழா

கிருஷ்ணகிரி

ஆகஸ்ட் 17:



கிருஷ்ணகிரி அடுத்த வெண்ணம்பள்ளி அரசு உயர்நிலைப்பள்ளியில் 80 வது சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது. பள்ளியின் தலைமை ஆசிரியர் பன்னீர்செல்வம் தலைமையில் நடைப்பெற்ற இந்த விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தலைவர் பி.சி.சேகர் கலந்துக் கொண்டு தேசிய கொடியினை ஏற்றிவைத்தார். பின்னர் அங்கு வைக்கப்பட்டிருந்த மகாத்மா காந்தியின் திருஉருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதைசெலுத்திசுதந்திர போராட்ட வீரர்களின் கனவுகளை நிறைவேற்றும் பொறுப்பு இன்றைய இளைய தலைமுறையின் கையில் உள்ளது என மாணவர்களுக்கு எடுத்துரைத்தார். கடந்த 10 வகுப்பு அரசு பொது தேர்வில் 100 சதவிதம் தேர்ச்சி பெறக்காரணமான வெண்ணம்பள்ளி அரசு உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் பன்னீர்செல்வம், மற்றும் சக ஆசிரியர்களான அமலா, ஆரோக்கிய மேரி, சகாய ஆரோக்கிய ராஜ், சதீஷ், முனிராஜ், சிவகுமார், சுகாசினி, தனஞ்செயன், டேவிட் ஆல்பர்ட் ஆகியோருக்கு பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் பி.சி.சேகர் நினைவு பரிசு மற்றும் பொன்னாடை அணிவித்து பாராட்டினார். தொடர்ந்துநடந்து முடிந்த 10 ம் வகுப்பு அரசு பொது தேர்வில் முதல் மூன்று இடங்களை பிடித்து அசத்திய கோகுலபிரியா, உஷாராணி, பிரியங்கா, ஆகிய மூன்று மாணவிகளுக்கும் ஊக்கு தொகையாக ஐந்தாயிரம் ரூபாயும் மற்றும் கேடயம் வழங்கி ஊக்குவிக்கப்பட்டது. தொடர்ந்து 80 வது சுதந்திர தினத்தினை முன்னிட்டு நடத்தப்பட்ட பேச்சுப் போட்டி, கட்டுரை போட்டி, ஓவிய போட்டி, கவிதை போட்டி, ஆகியப் போட்டிகளில்வெற்றிப் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. மேலும் இந்த விழாவில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் எம்.சி.ரகு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். பள்ளி மேலாண்மை குழு தலைவர் திருமதி.திம்மி, கௌரவ தலைவர் கிருஷ்ணமூர்த்தி, முன்னாள் தலைவர்கள் முருகேசன், பாலகிருஷ்ணன், துணைத்தலைவர் சீனிவாசன் உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்டனர்.

# தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தில் சுதந்திர தின கொண்டாட்டம்



தஞ்சாவூர் ஆகஸ்ட் 17

தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத் தில் சுதந்திர தின விழா கொண்டாட்டம் நடைபெற்றது

விழாவில் பதிவாளர் (பொறுப்பு) பன்னீர்செல்வம் முன்னிலை வகித்தார். துணைவேந்தர் குழு உறுப்பினர் பாரத ஜோதி தலைமை தாங்கி, தேசிய கொடியை ஏற்றி வைத்து பேசினார்

பின்னர் 2016 முதல் 2026 வரை மத்திய மாநில அரசுகளின் விருது பெற்ற ஆசிரியர்களுக்கும் ,என் எஸ் எஸ் ,என் சி சி மாணவர்களுக்கும் சிறப்பு செய்யப்பட்டது பேச்சுப் போட்டி, கட்டுரை போட்டி, ஓவிய போட்டி, பட்டிமன்றம் போன்ற போட்டிகளில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. தமிழ்நாடு அரசின் போக்குவரத்துக் கழக டிரைவர் ஜெயபால், கண்டக்டர் பிரபு ஆகியோருக்கு சிறப்பு செய்யப்பட்டது .

நிகழ்ச்சியை மக்கள் தொடர்பு அலுவலர் (பொறுப்பு) மொழிபெயர்ப்புத்துறை இணைபேராசிரியருமான முருகன் ஒருங்கிணைத்து வழங்கினார். இதில் நிதி அலுவலர் சிவக்குமார் மற்றும் கல்வியாளர் கள் பணியாளர்கள் மாணவமாணவிகள் திரளாக கலந்து கொண்டு, தேசிய மாணவர் படை அணிவகுப்பை அரியகையெழுத்துச் சுவடித்துறை இணைப்பேராசிரியர் ஆதித்தன் வழி நடத்தினார்

# பி.எஸ்.ஜி ஐடெக் மற்றும் "ப்ரோடிவிடி " இடையே கல்வி, தொழிற்பயிற்சிகான புரிந்துணர்வு ஒப்பந்தம்

சென்னை, ஆக. 17,

தொழில்துறை மற்றும் கல்வித்துறை இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் மற்றும் தொழில்துறை நடைமுறைகள் குறித்த நேரடி அனுபவத்தைப் பெற மாணவர்களுக்கு அதிக வாய்ப்புகளை உருவாக்கவும், தொழில்துறை மற்றும் கல்வித்துறை இடையிலான பிணைப்பை வலுப்படுத்த, ப்ரோடிவிடி ( இந்தியப் பிரிவு), பி.எஸ்.ஜி ஐடெக் மற்றும் இன்ஸைட் வெர்ஜ் டெக்னாலஜிஸ் ஆகியவை இணைந்து 'சிறப்பு செயற்கை நுண்ணறிவு மையத்தை' தொடங்கின.

பி.எஸ்.ஜி ஐடெக்ன் செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல் துறைக்கும் ப்ரோடிவிடி நிறுவனத்திற்கும் இடையே கையெழுத்தான இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் தரவு அறிவியல், தரவு மற்றும் டிஜிட்டல் தீர்வுகள், ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் திறன் மேம்பாடு, அத்துடன் தொழிற்பயிற்சி மற்றும் தொழில் துறை சார்ந்த திட்டப்பணிகளுக்கும் இது வழிவகுக்கும். கல்விசார் கற்றலைத் தொழில்துறையின் தேவைகளுக்கு ஏற்ப நெருக்கமாகக் கொண்டு வருவதே இந்த கூட்டு முயற்சியின் நோக்கமாகும். அறிவுப் பகிர்வு, செயல்முறைத் திட்டங்கள், தொழிற்பயிற்சி மற்றும் தொழில் துறைநிபுணர்களுடனான கலந்துரையாடல் ஆகியவற்றின் மூலம், வகுப்பறையில் கற்ற கோட்பாடுகள்எவ்வாறுநிஜவணிகம் மற்றும் தொழில்நுட்ப சவால்களில் பயன்படுத்தப்படுகின்றன என்பதைப் புரிந்துகொள்ளும் வாய்ப்பு மாணவர்களுக்கு கிடைக்கும்.

# செங்கை அரசு சிறுவர் சீர்திருத்த இல்லத்தில் இருந்து 11 பேர் தப்பியோட்டம்

செங்கல்பட்டு: செங்கல்பட்டு அரசு சிறுவர் சீர்திருத்த இல்லத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த 11 சிறுவர்கள், வெள்ளிக்கிழமை இரவு தப்பிச் சென்றனர். அவர்களில் ஒருவர் மட்டும் பிடிபட்டார். மீதமுள்ள 10 பேரை போலீஸார் தேடி வருகின்றனர். திருட்டு, கொள்ளை, போதைப் பொருள் விற்பனை, கொலை உள்ளிட்ட வழக்குகளில் தொடர்புடைய சிறுவர்கள், செங்கை அரசு சிறுவர் சீர்திருத்த இல்லத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் 11 பேர் நேற்று முன்தினம் இரவு, பாதுகாப்புப் பணியில் இருந்த வார்டனை அறைக்குள்தள்ளி வெளியே பூட்டிவிட்டு தப்பிச் சென்றனர்.சம்பவம்குறித்துதகவல்கிடைத்ததும் செங்கல்பட்டு டவுன் போலீஸார் அங்கு சென்று விசாரணை நடத்தினர். தப்பி யோடியவர்களில் ஒருவர் மட்டுமே பிடிபட்டார். மீதமுள்ள 10 பேரை போலீஸார் தேடி வருகின்றனர். செங்கல்பட்டு மாவட்ட எஸ்.பி.அய்மன் ஜமால் சீர்திருத்த இல்லத்துக்கு சென்று ஆய்வு செய்தார். செங்கல்பட்டு டவுன், தாலுகா, பாலூர், படாளம் காவல் நிலையங்களைச் சேர்ந்த போலீஸார் பல்வேறு பகுதிகளில் தேடுதல் பணியில் ஈடுபட்டனர். கடந்த 8 மாதங்களில் இங்கு நடைபெறும் 3வது தப்பியோட்ட சம்பவம் இதுவாகும். இதையடுத்து இல்லத்தின் பாதுகாப்பை பலப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

**DHINA TAMIL DAILY** : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.